**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2022**

# A031 தமிழக வரலாறு

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தொல்காப்பியம் வழங்கும் குறிஞ்சி நில மக்களின் பெயரை எழுதுக?
2. தெலுங்கு மொழியில் உள்ள மதுரா விஜயம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
3. காரவேலனின் காதி கும்பாக் கல்வெட்டில் தமிழகம் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?
4. ஒண்தொடி என்ற சொல்லின் பொருள் யாது?
5. எத்தனை வகையான கூத்துகள் சங்க காலத்தில் இருந்தன?
6. களப்பிரர் காலத்தில் பௌத்த சமயத்திற்குப் பெயர் பெற்று விளங்கிய ஊரைக் குறிப்பிடுக?
7. தேர் என்று வழங்கப்படும் கோயில் வகை எது?
8. கடாரம் கொண்டான் என்று அழைக்கப்படுபவர் யார்?
9. சிற்பிகள் எவற்றில் சிற்பங்களைச் செதுக்கினர்?
10. பிற்காலப் பாண்டிய மன்னருள் மிகுந்த புகழ்பெற்று விளங்கியவரைக் கூறுக?
11. சிதம்பரத்தில் சுவாமித்தேவர் தொடங்கிய நூலகத்தைக் கண்காணித்து வந்தவர் யார்?
12. வத்தை வரி என்பது என்ன?

13. திரிகூடராசப்பக் கவிராயரை ஆதரித்த நாயக்க மன்னரைக் குறிப்பிடுக?
14. புலிக்காட்டில் தங்கித் தம் பணிகளைச் செய்த டச்சுப்பாதிரியார் யார்?
15. சென்னையில் முதன்முதலில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு எது?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கல்ராயன் மலை – குறிப்பு வரைக?
2. கிரேக்கர்கள் தமிழகத்துடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பை விளக்குக?
3. வேள்விக்குடிச் செப்பேடு பற்றி எழுதுக?
4. முதலாம் இராசேந்திரனின் கங்கை படையெடுப்பு குறித்தெழுதுக?
5. மராட்டியர் ஆட்சியில் மொழி நிலையை விவரி?
6. ஐரோப்பியர் வருகைக்கானக் காரணங்களைக் கூறுக?
7. டச்சுக்காரர்களின் ஆதிக்கம் எவ்வாறு இருந்தது?
8. சுயராஜ்ஜியக் கட்சி என்றால் என்ன?

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ.) பிற்காலத் தமிழகத்தின் இயற்கை அமைப்பை கட்டுரைக்க?

(அல்லது)

(ஆ.) பல்லவர்களின் ஆட்சிமுறையை விவரிக்க?

2. (அ.) பிற்காலச் சோழரின் அரசியல் நெறியை விவரி?

(அல்லது)

(ஆ.) முற்காலப் பாண்டியமன்னர்கள் குறித்து விளக்குக?

3. (அ.) மதுரை நாயக்கர் ஆட்சியின் வரி விதிப்பை விளக்கி வரைக?

(அல்லது)

(ஆ.) விடுதலைக்குப் பின் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி நிலையை விரித்துரைக்க.

*** 